# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (20.01.2016 முதல் 24.01.2016)

**அறிக்கை எண் 006/2016** **தேதி: 19.01.2016**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 29°செ முதல் 32°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 17°செ முதல் 22°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 16°செ முதல் 20°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 5°செ முதல் 10°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் வறண்ட வானிலையே காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (20.01.2016 முதல் 24.01.2016)**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 31°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 78 முதல் 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 52 முதல் 56 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8கி.மீ அளவுக்கு பெரும்பாலும் வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 20-01-16 | 0.5 | 31 | 21 | 4 | 78 | 42 | 8 | வட கிழக்கு |
| 21-01-16 | 1.0 | 31 | 21 | 4 | 80 | 42 | 8 | வட கிழக்கு |
| 22-01-16 | 0.5 | 31 | 21 | 4 | 80 | 42 | 8 | வட கிழக்கு |
| 23-01-16 | 0 | 31 | 21 | 4 | 80 | 42 | 8 | வட கிழக்கு |
| 24-01-16 | 0 | 31 | 21 | 4 | 80 | 42 | 8 | வட கிழக்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ அறுவடை முடிந்த பிறகு நிலத்தினை கொத்து அல்லது சட்டிக் கலப்பை கொண்டு உடனடியாக உழுவதன் மூலம் களைகளை கட்டுப்படுத்துவதுடன் கோடை கால மழையின் ஈரப்பத்ததை சேகரிக்கலாம்.
- ✓ பயிர் கழிவுகளை எரிக்காமல், எதிர்பார்க்கப்படும் தூறல் மழையைப் பயன்படுத்தி பயிர் கழிவுகளை நிலத்தில் உழுவதன் மூலம் பயிர் கழிவுகள் எளிதில் மட்கும்.
- ✓ வரும் நாட்களில் இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுவதால் பயறு மற்றும் நெல் அறுவடையை 23 ஜனவரி 2016 பின் தள்ளிப்போடவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ பயிர் கழிவுகளை எரிக்காமல், எதிர்பார்க்கப்படும் தூறல் மழையைப் பயன்படுத்தி பயிர் கழிவுகளை நிலத்தில் உழுவதன் மூலம் பயிர் கழிவுகள் எளிதில் மட்கும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**